GOVERNMENT OF PUDUCHERRY
DEPARTMENT OF SCEINCE, TECHNOLOGY AND ENVIRONMENT
PUDUCHERRY COUNCIL FOR SCIENCE AND TECHNOLOGY
Dr. ABDUL KALAM SCIENCE CENTRE AND PLANETARIUM

# SKY WATCHING PROGRAMME

## (VISIBLE PLANETS)

**Organised**
**by**
**Dr.Abdul Kalam Science Centre and Planetarium, Puducherry.**



**Date : 28.02.2025**

**Time : 6.00 PM - 8.00 PM**

**Venue : Helipad, Lawspet, Puducherry**











■ புதுச்சேரி அறிவியல் தொழில்நுட்பம் மன்றம் சார்பில், விண்வெளியில் ஏழு கோள்களை பார்ப்பதற்கு நேற்று இரவு ஏற்பாடு செய்திருந்தனர்.



வானில் தோன்றிய கோள்களின் அணிவகுப்பை தொலைநோக்கி மூலம் பொதுமக்கள் பார்த்தபோது எடுத்தபடம்.



வானில் தோன்றிய கோள்களின் அணிவகுப்பை தொலைநோக்கி மூலம் பொதுமக்கள் பார்த்தபோது எடுத்தபடம்.

### வானில் தெரியும் அபூர்வ நிகழ்வான

# கோள்களின் அணிவகுப்பை வியந்து பார்த்த பொதுமக்கள்

## மேகமூட்டத்தால் 4 கோள்கள் தெரியவில்லை

புதுச்சேரி. மார்ச்.1-

வானில் தோன்றிய அபூர்வ நிகழ்வான கோள்களின் அணிவகுப்பை பொதுமக்கள் வியந்து பார்த்தனர்.

### அபூர்வ நிகழ்வு

சூரிய குடும்பத்தில் உள்ள கோள்கள், சூரியனை மையமாக வைத்து சுற்றி வருகின்றன. இதில், அபூர்வ நிகழ்வாக, சில கோள்கள் ஒரே நேர்கோட்டில் சந்திக்கும். அதுபோன்ற அரிய நிகழ்வான வெள்ளி, வியாழன், சனி, செவ்வாய், புதன், நெப்டியூன், யுரேனஸ் ஆகிய 7 கோள்கள் ஒரே நேர்கோட்டில் நேற்று வானில் அணிவகுத்தன. இதில் வெள்ளி, வியாழன், சனி, செவ்வாய், புதன் கோள்களை வெறும் கண்களால் பார்க்கலாம். ஆனால் நெப்டியூன், யுரேனஸ் கோள்களை தொலைநோக்கியால் மட்டுமே காண முடியும்.

இந்த அபூர்வ நிகழ்வை பொதுமக்கள் தொலைநோக்கி மூலம் பார்க்க லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானத்தில் அப்துல் கலாம் கோளரங்கம் சார்பில் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதற்காக 2 தொலைநோக்கிகள் அங்கு வைக்கப்பட்டு இருந்தன. இதன் வழியாக கோள்களின் அணிவகுப்பை பார்க்க பொதுமக்கள் தங்கள் குழந்தைகளுடன் திரண்டு வந்தனர்.

### 3 கோள்களே தெரிந்தன

அவர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து, தொலைநோக்கி மூலம் கோள்களை பார்த்து மகிழ்ந்தனர். வியாழன் மற்றும் அதனை சுற்றியுள்ள 4 துணை கோள்கள், செவ்வாய், வெள்ளி ஆகியவற்றை தனித்தனியாகவே பார்க்க முடிந்தது. மேக மூட்டம் அதிகமாக இருந்ததால் இவற்றின் அணி வகுப்பையும், புதன், சனி, நெப்டியூன், யுரேனஸ் ஆகிய கோள்களையும் காண முடியாமல் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

### அருமையாக இருந்தது



புதுச்சேரியை சேர்ந்த மாணவி தருண்யா கூறுகையில், 'தொலைநோக்கி மூலம் பார்க்கும் போது நிலவு மிகவும் அழகாக இருந்தது. 7 கோள்களை மொத்தமாக ஒரே நேரத்தில் பார்க்கலாம் என்று மிகுந்த ஆவலுடன் வந்தேன். ஆனால் 3 கோள்களை மட்டுமே பார்க்க முடிந்தது. அதனை ஒவ்வொன்றாக காண்பித்தனர். மிகவும் அருமையாக இருந்தது. மற்ற கோள்களை பார்க்க முடியாமல் போனது ஏமாற்றம் தான் என்றார்.



மாணவி தனுஶ்ரீ, 'இரவு நேரத்தில் வானில் நட்சத்திர கூட்டங்களை பார்த்தாலே அழகு தான். அதுவும் தொலைநோக்கி மூலம் வியாழன், செவ்வாய் ஆகிய கோள்களை தெளிவாக பார்த்தேன். இது புதுவித அனுபவமாக இருந்தது என்றார்.